2007 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமுனாமரத்தூர் சந்தன மரத்திற்குப் பெயர் பெற்ற ஒரு மலைப் பகுதி. ஆனால், இன்றைக்கு அங்கே மரங்கள் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆக, வன ஆராய்ச்சி மையத்தின்மூலம் அங்கே சந்தன மரக் கன்றுகளை மீண்டும் நட்டு, அந்த மலையிலே சந்தன மரங்களை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன ஆராய்ச்சி மையங்களில் அதிக எண்ணெய் தரக்கூடிய சந்தன மரங்களை, ஒட்டுக் கன்றுகளை உருவாக்கி, அவை அந்தப் பகுதியிலே இருக்கின்ற தனியார்களுக்கு தரப்பட்டு அதேபோல வனப் பகுதிகளிலும் நடப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

கால்நடை மருத்துவமனை

***7585—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, காளிப்பேட்டையில் கால்நடை மருத்துவமனை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காளிப்பேட்டையில் புதியதாகக்

கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளிப்பேட்டை பகுதி முழுக்க முழுக்க மலைவாழ் மக்களை உள்ளடக்கிய பகுதியாகும். சேலம் மாவட்டத்தின் எல்லையை ஒட்டி இருக்கின்ற காரணத்தால், அங்கேயிருந்து கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டுமானால் 15, 16 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டி இருக்கிறது. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கால்நடைகளை வளர்ப்பதற்காக, அரசு பல்வேறு சலுகைகளைச் செய்து வருகிற இந்த நேரத்தில், மலைவாழ் மக்களுடைய நலன் கருதி, சிறப்பு நேர்வாகக் கருதி, அந்தப் பகுதியில் ஒரு கால்நடை மருந்தகத்தை உருவாக்கித் தர, அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர் தொகுதி, காளிப்பேட்டை கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம்தான் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. கிளை நிலையத்தை நேரடியாக மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலாது. கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத்தான் தரம் உயர்த்த இயலும். பின்புதான் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த முடியும். இருந்தபோதிலும், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் அப்பகுதியில், அவர்களுடைய முக்கியத் தொழிலாக கால்நடை வளர்ப்பு இருந்து வருகிற ஒரு காரணத்தைக் கருத்தில்கொண்டும், காளிப்பேட்டை கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்திற்கும் மேல் அதிகமாக இருப்பதைக் கவனத்தில் கொண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள், தமிழ்நாட்டிலே மிக அதிகமாக கால்நடைகள் இருக்கிற பகுதியாகும். முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி இருக்கிற அந்தப் பகுதி மக்கள், கால்நடையை மாத்திரம்தான்

2007 ஏப்ரல் 9]

நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆசியக் கண்டத்திலே மிகச் சிறப்புவாய்ந்த மத்தகிரி கால்நடைப் பண்ணை, வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து திப்பு சுல்தான் காலம் வரையில், குதிரைகளை வளர்த்து நாடு பூராவும் இராணுவத்திற்கு அனுப்புகிற புகழ்பெற்ற இடமாக இருந்து வந்த இடம். அந்த இடம் ஆடு, மாடுகளை வளர்ப்பதற்கும், தரம் உயர்ந்த கால்நடைகளை உருவாக்குவதற்குரிய வாய்ப்பு உள்ள இடமாக இருக்கிற காரணத்தால், தமிழ்நாட்டில் முதல் முதலாக கால்நடை பல்கலைக்கழகத்தை உருவாக்கிய நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய ஆட்சியில், அந்த மாவட்டத்து மக்களுடைய நலன் கருதி சிறப்பு வாய்ந்த, புகழ்பெற்ற அந்த மத்தகிரி கால்நடைப் பண்ணையில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை நடப்பு ஆண்டிலேயே உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 11 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அமைக்க நம்முடைய அரசு உரிய திட்டம் தீட்டி வருகிறது. மாண்புமிகு மொரப்பூர் தொகுதி உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை இந்த அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் பாளையன்கோட்டை, சோழதரம் ஆகிய இடங்களில் உள்ள கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்படாத நிலையில் உள்ளன. கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே இதுபற்றிக் கேள்வி நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொன்னபோது, துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக சரி செய்யப்படும் என்று உறுதி அளித்தார்கள். ஆனால் தொடர்ந்து இன்னும் அதே நிலைதான் உள்ளது. விரைவில் அந்தக் கிளை நிலையங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுக் காலமாக இத்துறை நலிவுற்ற நிலையில் இருந்தது. எந்த ஒரு கிளை நிலையத்திலும், மருந்தகத்திலும், மருத்துவமனையிலும் பொறுப்பாக ஒரு மருத்துவரோ, கால்நடை ஆய்வாளர்களோ இல்லாத ஒரு நிலைமை இருந்தது. இந்த அரசு விரைவாக, வேகமாக அதைச் சீராக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நம்முடைய சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கு இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது உரிய விளக்கங்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

பால் குளிரூட்டும் நிலையம்

*8815—**திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகரில் புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS